**உள்ளூராட்சி விரிவாக்கல் துறைச் செயற்திட்ட ம் - (புற நெகும) - 2018**

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------

உள்ளூராட்சி விரிவாக்கல் துறைச் செயற்திட்டத்தின் (புற நெகும) 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2011 ஒக்தோபர் 21 ஆந் திகதிய 2790–எஸ்ஆர்ஜ(எஸ்எவ்) மற்றும் 2016 நவம்பர் 02 ஆந் திகதிய 3431 – எஸ்ஆர்ஜ(எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி உள்ளக மற்றும் உள்விவகார அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகக் காணப்படுகின்றதுடன் 07 மாகாணங்களின் மாகாண சபைகள் செயற்திட்டத்தின் அமுல்படுத்தல் முகவர்களாகக் காணப்படுகின்றன. கணக்களிக்கும் பொறுப்பு, நிதிசார் மற்றும் தொழில்நுட்பரீதியாக பலப்படுத்தப்பட்ட உள்ளூராட்சி சபைகளினூடாக முன்னேற்றமடைந்த உள்ளூராட்சி உட்கட்டமைப்பு மற்றும் பயனுறுதிமிக்க சேவை விநியோகம் என்பவற்றை அடைதல் செயற்திட்டத்தின் நோக்கமாகும். நீடித்த சிறுநீரக நோய்களினால் பாதிக்கப்பட்ட இலங்கையில் அபிவிருத்தி குறைந்த 07 மாகாண பிரதேசங்களிலுள்ள தேசிய நீர் விநியோக மற்றும் வடிகாலமைப்புச் சபை மற்றும் உள்ளூராட்சி சபைகளினால் வழங்கப்படும் உட்கட்டமைப்பு மற்றும் சேவைகளினை முன்னேற்றுவது செயற்திட்டத்தின் பின்தொடர் கடன்களின் நோக்கமாகும். ஆகையினால், நீர் விநியோக முறைமையின் முன்னேற்றம், உட்கட்டமைப்பு, உள்ளூராட்சி அரசினால் வழங்கப்படும் அடிப்படை வசதியின் கொள்கை சீர்திருத்தங்கள் மற்றும் கொள்திறன் வலுப்படுத்தலினை முன்னேற்றுதலுடன் தொடர்புடைய விடயமொன்றினை விபரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டன. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 8,940 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 68.80 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 7,670 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 59 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2012 யூலை 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2015 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்ட செயற்பாடுகளின் பூர்த்தியாக்கல் திகதி, 2017 யூன் 30 வரை நீடிப்புச் செய்யப்பட்டிருந்தது.

### 1.3 அபிப்பிராயம்

2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினை மற்றும் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இற்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்கனுக்கான முகாமைத்துவத்தினதும் அவ்ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு செயற்திட்டத்தின் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டது.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| 2016 மார்ச் 24 இன் 1/2006 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை | செயற்திட்ட வழிகாட்டல் குழுவின் கூட்டங்கள் 02 மாதங்களுக் ஒரு தடவை நடாத்தப்பட வேண்டுமென வேண்டப்படுகின்றது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது 04 கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப் பட்டிருந்தது. | செயற்திட்டத்தின் கண்காணிப்பு நடவடிக்கைகளினை வினைத்திறனாக மேற்கொள்ள முடியாது போகும். | 2018 இல், கண்காணிப்பு குழுக் கூட்டங்கள் எதிர்பார்க்கப்படாத அரசியல் நிலைமைகள் காரணமாக, 04 தடவைகள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது | செயற்திட்ட கண்காணிப்பு குழுக்களின் கூட்டங்கள் தொடர்ச்சியாக நடாத்தப்பட வேண்டுமென வேண்டப்படுகின்றது |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயலாற்றல்

செயற்திட்ட அமுல்படுத்தல் திட்டங்களின் பிரகாரம், 07 மாகாணங்களில் அவர்களின் உட்கட்டமைப்பு தேவைப்பாடுகளினை மேம்படுத்துவதற்கு 105 உள்ளூராட்சி சபைகளுக்கு செயற்திட்டம் உதவியளித்திருந்ததுடன் 178 உள்ளூராட்சி சபைகளின் தொடர்புடைய அபிவிருத்தி வேலைகள் முன்னைய ஆண்டின் இறுதியில் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. மேலும் பிற்சேர்க்கை கடன் வசதிகளின் கீழ் 29 உள்ளூராட்சி சபைகளில் 29 நீர் விநியோக செயற்திட்டங்கள், 35 நிர்மாண வேலைகளினை மேற்கொள்வதற்கு பட்டியலிடப்பட்டிருந்ததுடன் அதில், 04 உள்ளூராட்சி சபைகளில் காணப்பட்ட 04 நீர் விநியோக செயற்திட்டங்கள் மீளாய்வாண்டின் போது பூர்த்தியாக்கப்பட்டன. அவ்வாறான செயற்திட்டங்களின் பௌதீக செயலாற்றலுடன் தொடர்புடைய விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செயற்பாடு | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பௌதீக செயலாற்றல் எதிர்பார்க்கப்பட்டது % | அடைந்து கொள்ளப்பட்டது % | தாமதங்கள் மாதங்களில் | | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|---|---|
| நுவரவெவ நீர் சுத்திகரிப்பு பொறியின் இயலளவு முன்னேற்றம் | 40 | 5 | 21 | (அ) | கிரய மதிப்பீடுகளின் மிகையான ஓட்டம் | கடனளிக்கும் முகவர்களின் இணக்கப் பாட்டினைத் பெறுவதில் தாமதம் காரணமாக ஒப்பந்தங்களினை அளிப்பதில் தாமதங்கள் | தாமதங்களினை கண்டறிய மற்றும் மேலதிக கிரயங்களினை தவிர்ப்பதற்கு ஒப்பந்த வேலைகள் உரிய நேரத்தில் பூர்த்தியாக்கப்படுவதனை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| **நீர் விநியோக முறைமையின் விரிவாக்கம்** | | | | | | | |
| இப்பாகமுவ நீர் விநியோக முறைமை | 100 | 85 | 13 | (ஆ) | குறித்துரைக்கப்பட்ட தரப்பினர் எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் பெறப்படவில்லை. | ஒப்பந்தக்காரரின் மந்தமான செயலாற்றல் | - மேற்படி - |
| புத்தள - நீர் விநியோக திட்டம் | 55 | 30 | 20 | | | | - மேற்படி - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **சிலில் நிர்மாண வேலைகள்** | | | | | |
| பெந்தோட்டை - வாராந்த சந்தை | 70 | 20 | 11 | பிரதேச சபையினால் பூமியை நிரப்புதல் காரணமாக தாமதம் | - மேற்படி - |
| மஹர பிரதேச சபை - பல்தேவைக் கட்டிடம் | 100 | 70 | 8 | ஒப்பந்தக்காரரின் மந்தமான செயலாற்றல் | - மேற்படி - |
| ஜா-யல பிரதேச சபை - கந்தானையில் அமைந்துள்ள பல்தேவைக் கட்டிடம் | 75 | 32 | 11 | - மேற்படி - | |
| வத்தளை பிரதேச சபை - மஹாபகேயில் அமைந்துள்ள பல்தேவைக் கட்டிடம் | 80 | 63 | 10 | - மேற்படி - | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கட்டான பிரதேச சபை - கடிரனாயில் அமைந்துள்ள கேட்போர்க் கூடம் / சமுதாய மண்டபம் | 40 | 22 | 14 | | தூணுக்கான அடித்தளமிடும் போது எதிர்பார்க்கப்படாத மண்ணின் நிலைமை காரணமாக, வேலைகள் 4 மாதங்கள் தாமதமடைந்து காணப்பட்டது. | - மேற்படி - |

## 3.2 களப் பரீட்சிப்புக்களில் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு விடயம் | தாக்கம் | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ) பலப்பிட்டியயில் அமைந்துள்ள பல்தேவைக் கட்டிடம்** | | | |
| அங்கீகரிக்கப்பட்ட 40 நியூட்டன்கள் பலத்திற்குப் பதிலாக 30 நியூட்டன்கள் குறைந்த பலத்துடன் உள்ளக பிணைப்பு கற்களினைப் பயன்படுத்துவதற்கு ஒப்பந்தக்காரர் அனுமதியளிக்கப்பட்டிருந்தனர். மேற்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப பரீட்சிப்புக்களின் பிரகாரம், 30 நியூட்டன்கள் பலத்திற்குக் குறைந்த உள்ளக பிணைப்பு கற்கள் ஒப்பந்தகாரரினால் பயன்படுத்தப்பட்டிருந்தமை பௌதீக பரீட்சிப்பில் அவதானிக்கப்பட்டன. | குறைந்த காலப்பகுதி காரணமாக குறித்துரைக்கப்பட்ட விளைவுகளினை அடைந்து கொள்ள முடியாது போகும். | நிர்மாணத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட கற்கள் விபரக் குறிப்புரைகளின் பிரகாரம் நியாயமான பலத்துடன் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | ஒப்பந்ததாரர்கள் தர நியமங்களுடன் தொடர்ச்சியாக இணங்குவதனை மேற்பார்வை ஊழியர்கள் உறுதிப்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| **(ஆ) அம்பாலங்கொட பிரதேச சபையினால் நிர்மாணிக்கப்பட்ட வாசிகசாலைக் கட்டிடம், கேட்போர்கூடம் மற்றும் வாகனத் தரிப்பிடம்** | | | |
| நிறுவனத்தின் பரீட்சிப்புக்காகப் பயன்படுத்தப்பட்ட கதவுப் பொருத்துக்கள், யன்னல் கிளாஸ்கள் மற்றும் மின்பாரந் தூக்கி போன்ற கட்டிட மூலப்பொருட்கள் விபரக்குறிப்புக்களுடன் இணங்கியிருக்கவில்லை. | - மேற்படி - | முறையாக பதிலளித்திருக்க வில்லை. | - மேற்படி - |

## 3.3 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாட்டுடைய சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு விடயம் | தாக்கம் | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) நீர் வளங்கள் பற்றாக்குறை காரணமாக வன்னாத்திவில்லில் காணப்படும் நீர் விநியோக முறைமை தொடர்ந்தும் விளைவற்றுக் காணப்படுகின்றது. | பிரதேசத்தில் காணப்படும் 4,333 குடும்பங்களுக்கு எவ்வித நீர் விநியோக வசதிகளும் அளிக்கப்படாமை. | இனங்கப்பட்டவாறு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை நீர் இணைப்புக்களினை வழங்கியிருக்கவில்லை. தொடர்புடைய உத்தியோகத்தர்கள் பின்தொடர் நடவடிக்கைகளினை எடுப்பதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். | செயற்திட்டத்தின் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்கள், பயனாளிகளுக்கு வசதிகளினை வழங்கும் பொருட்டு அடைந்து கொள்ளப்படக்கூடியதாகக் காணப்படல் வேண்டும். |
| (ஆ) ரதிகமயில் அமைந்துள்ள பல்தேவை கட்டிடங்கள் மற்றும் பஸ்தரிப்பு நிலையம் என்பன குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படவில்லை. | குறித்துரைக்கப்பட்ட நோக்கங்கள் அடைந்து கொள்ளப்பட்டிருக்க வில்லை. | பிரதேச சபை இரண்டு மாடிகளினையும் ஒரே நேரத்தில் திறப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், மேற்தளம் இதுவரை நிர்மாணத்தின் கீழ்க் காணப்படுகின்றது. தொடர்புடைய உத்தியோகத்தர்கள் பின்தொடர் நடவடிக்கைகளினை எடுப்பதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | பயணிகளின் பாதுகாப்பு மற்றும் ஏனைய வசதிகளினை கருத்திற் கொண்டிராது மாவத்தகமயிலுள்ள பேரூந்து நிலையம் அதன் தொழிற்பாடுகளினை ஆரம்பித்திருந்தது. | குறித்துரைக்கப்பட்ட நலன்கள் பொது மக்களுக்கு கிடைக்கப் பெற்றிருக்கவில்லை. | செயற்திட்டம் பேரூந்து நிலையத்திற்காக அளிக்கப்பட்ட ஒதுக்கீட்டிற்குள் தரைத் தளத்தினை நிர்மாணித்திருந்தது. பிரதேச சபை மேற்தளத்தினை நிர்மாணிப்பதற்கு இனங்கியிருந்தது. மேற்தளத்தின் கூரை பேரூந்துக்களின் விரிகுடாக்களுக்கான தங்குமிடமொன்றாக திட்டமிடப்பட்டுள்ளது. தொடர்புடைய உத்தியோகத்தர்கள் பின்தொடர் நடவடிக்கைகளினை எடுப்பதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். | நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்களினைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | நீர் வளங்கள் பவுசர்களின் பற்றாக்குறை காரணமாக, பொல்பிட்டிகமயில் காணப்படும் நீர் விநியோக முறைமை பயன்படுத்தப்படாது தொடர்ந்து காணப்படுகின்றது. | பிரதேசத்தில் காணப்படும் 1700 குடும்பங்களுக்கு எவ்வித நீர் விநியோக வசதிகளும் அளிக்கப்படாமை. | இந்த நீர் திட்டம் 2017 இல் பூர்த்தியாக்கப்பட்டதுடன் 350 வீட்டு இணைப்புக்கள் உயரமான மேட்டுப் பிரதேசத்தில் தொடர்ந்தும் காணப்படுகின்றன. நீர் பவுசர்களினைப் பயன்படுத்தி நீர் விநியோகத்தினை வழங்குவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. | பொருத்தமான வகையில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களினை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (உ) | நுழைவு வீதியின் பற்றாக்குறை காரணமாக மீகஹகியுலயில் அமைந்துள்ள பேரூந்து நிலையம் தொடர்ந்தும் விளைவற்றுக் காணப்படுகின்றது. | குறித்துரைக்கப்பட்ட நலன்கள் பொது மக்களுக்கு கிடைக்கப் பெற்றிருக்கவில்லை. | நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் தயாரிக்கப்பட்ட நகர திட்டத்தின் அடிப்படையில் மீகஹகியுல பேருந்து நிலையம் நிர்மாணிக்கப்பட்டதுடன் பேரூந்து நிலையத்திற்கான நுழைவு வீதியினை நிர்மாணிப்பதற்கான பொறுப்பு, செயற்திட்ட வரம்பின் கீழ்க் காணப்படாததுடன் மிகுதி வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் காணப்படுகின்றது. | வினைத்திறனான வகையில் பேரூந்து நிலையத்தினைப் பயன்படுத்தும் பொருட்டு நுழைவு வீதியினை நிர்மாணித்து பிரதேச சபைக்கு உதவியளிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஊ) | நுழைவாயில் வீதி மற்றும் நீர் விநியோக சேவையின் பற்றாக்குறை காரணமாக பண்டாரவல பிரதேச சபையின் வாராந்த சந்தை மற்றும் பல்தேவைக் கட்டிடம் என்பன தொடர்ந்தும் விளைவற்றுக் காணப்படுகின்றது. | குறித்துரைக்கப்பட்ட நலன்கள் பொது மக்களுக்கு கிடைக்கப் பெற்றிருக்கவில்லை. | உமா ஓயா செயற்திட்டத்துடன் தொடர்புபட்ட பிரச்சினைகள் காரணமாகப் பிரதேசத்தில் காணப்படும் விவசாய முறையின் தோல்வி காரணமாக, நிர்மாணங்களினைப் பூர்த்தி செய்த பின்னர், வாராந்த சந்தையினை தொழிற்படுத்த முடியாதிருந்தது. மாகாண சபை செயற்பாடுகளினை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கும். | குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக கட்டிடத்தினைப் பயன்படுத்துவதற்கு மற்றும் ஏனைய அபிவிருத்தி வேலைகளுக்காக தேவைப்படும் வசதிகளினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (எ) | இரத்தோட்டை பிரதேச சபையில் காணப்படும் வாராந்த சந்தை பொது மக்களின் பயன்பாட்டிற்காக திறக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்துரைக்கப்பட்ட நலன்கள் பொது மக்களுக்கு கிடைக்கப் பெற்றிருக்கவில்லை. | பிரதேச சபைக்கு கட்டிடங்களினை கையளித்த பின்னர், அவர்களின் சொந்த நிதியின் மூலம் பகுதிகளாகப் பிரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். சந்தையினை விரைவில் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக கட்டிடத்தினைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஏ) | வில்கமுவயில் அமைந்துள்ள மயானம் பற்றாக்குறைக் கேள்வி காரணமாக குறைப்பயன்பாட்டுடன் தொடர்ந்தும் காணப்படுகின்றது. | குறித்துரைக்கப்பட்ட நலன்கள் பொது மக்களுக்கு கிடைக்கப் பெற்றிருக்கவில்லை. | குறைந்த மக்கள் தொகை மற்றும் பிரதேசத்தில் போதுமானளவு மயானங்கள் காணப்படுகின்றமை காரணமாக மயானத்தின் பயன்பாட்டிற்கான கேள்வி குறைந்தளவில் காணப்படுகின்றது. சுற்றுப் பிரதேசங்களில் காணப்படும் குறுக்குக் கால்வாய் பாலத்தினை மேம்படுத்துவதற்கு பிரதேச சபைக்கு மாகாண சபை நிதிகளினை ஒதுக்கியுள்ளதுடன் அதன் பின்னர் மயானத்திற்கான கேள்வி மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. | வில்கமுவ பிரசேத்தில் நிர்மாணிக்கப்பட்ட மயானத்தின் தேவை முறையாக மதிப்பீடு செய்யப்பட்டிருக்காததுடன் செயற்திட்டத்தினால் வழங்கப்பட்ட நிதிகள் வீணாக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஐ) | முறையான நீர் வளங்களின் பற்றாக்குறை காரணமாக வில்கமுவயில் அமைந்துள்ள நீர் விநியோகத் திட்டம் தொடர்ந்தும் பயன்படுத்தப்படாது காணப்படுகின்றது. | பிரதேசத்தில் காணப்படும் 350 குடும்பங்களுக்கு நீர் விநியோக வசதிகள் வழங்கப்படாமை. | நீர் செயற்திட்டத்தின் நிர்மாண வேலைகளினை ஆரம்பிப்பதற்கு முன்னர், நீரின் தரம் மற்றும் கனியவியல்சார் பரீட்சிப்புக்கள் என்பன நிர்மாணிக்கப்பட்ட திட்டத்தின் இயலளவின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நிர்மாணத்தின் பின்னர் வறட்சியான காலநிலை நிலைமை காரணமாக, நீர் விநியோகத்தின் தரம் குறைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | பிழைகளைக் கண்டுபிடிக்க நிபுணர்களிடம் ஆலோசனைகளினைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஒ) | டிக்லாந்தயில் அமைந்துள்ள நீர் விநியோக திட்டத்தின் தாழ்ந்த நீரின் பற்றாக்குறை காரணமாக தொடர்ந்தும் விளைவற்றுக் காணப்படுகின்றது. | குறித்துரைக்கப்பட்ட நலன்கள் பொது மக்களுக்கு கிடைக்கப் பெற்றிருக்கவில்லை. | நீரின் தரம் பருகும் நோக்கங்களுக்காக பொருத்தமானதாகக் காணப்படுகின்றது என வடிவமைப்பு கட்டிடத்தில் நீர் வள சபையினால் பரிந்துரைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நிர்மாணத்தின் பின்னர் இந்த நிலைமை மாற்றமடைந்திருந்தது. | சொத்துக்களினை குறித்துரைக்கப்பட்ட நோக்கத்திற்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.4 மனித வளங்கள் முகாமைத்துவத்துடன் தொடர்புடைய விடயங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு விடயம் | தாக்கம் | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 1/2006 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2.2.4 ஆம் | செயற்திட்டத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளில் | செயற்திட்டத்தின் அத்தியவசதியத் தேவை காரணமாக, பதில் கடமை | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுடன் இணங்குதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | பந்திக்கு முரணாக, பதில் கடமை அடிப்படையில் செயற்திட்டப் பணிப்பாளர் நியமிக்கப்பட்டிருந்தார். | தாக்கமளிக்கும். | அடிப்படையின் கீழ் ஏனைய செயற்திட்டத்தின் பணிப்பாளர் நியமிக்கப்பட்டிருக்கின்றார். | |
| (ஆ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 1/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2.2.9 ஆம் பந்தியினால் வேண்டப்பட்டவாறு அதிகுறைந்த தகைமைகளினைக் கொண்டிராத நபர்கள் தென் மாகாணத்திலுள்ள உப அலுவலகங்களில் உதவி பொறியியலாளர் மற்றும் உதவி கணியவியல் அளவையாளரொருவர் நியமிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | முறையாக பதிலளித்திருக்கவில்லை. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம், முக்கிய ஊழிய உறுப்பினர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்படல் வேண்டும். |
| (இ) | முறையான ஆட்சேர்ப்பு நடைமுறைகளினை மேற்கொண்ட பின்னர், உத்தியோகத்தரொருவர் தெரிவு செய்யப்பட்டு, 2018 மே 08 இல் பரிந்துரைக்கப்பட்ட போதிலும், சிரேஷ்ட பொறியியலாளர் பதவி, பதில் கடமை அடிப்படையில் நிரப்பப்பட்டிருந்தது. | - மேற்படி - | தென் மாகாணத்தில் சிரேஷ்ட பொறியியலாளர் பதவியில் வெற்றிடம் காணப்படாமையினால், 2018 சனவரியிலிருந்து பகுதி நேர அடிப்படையில் மாகாண பிரதம பொறியியலாளரினை நியமிப்பதற்கு பிரதம செயலாளர் பரிந்துரைத்திருந்தார். | தெரிவு செய்யப்பட்ட நபர் நியமிக்கப்பட வேண்டியதுடன் பொறுப்புக்கள் கையளிக்கப்படல் வேண்டும். |